**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 56/2019 தேதி- 23.07.2026

(P.W.1) . செலஸ்டின்ராஜ்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் அசல் வழக்கு எண் 39/2014 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் சர்வே எண் 758/17 எ என்றால் சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கிலும் சர்வே எண் 758/17 எ என்றால் சரிதான். தங்கராஜ் அவர் வாங்கிய சொத்தை பல பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். தங்கராஜ் வழிப்பாதை அமைத்து பல பிளாட்டுகளாக பிரித்து பல நபர்களுக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். தங்கராஜ் பிளாட் போடும்போது கடைசி இடத்தில் மதில் கட்டி விட்டார் என்றால் தங்கராஜ் கட்டவில்லை பிரதிவாதிகள் இருவரும் இடத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளார்கள். நான் ஏற்கனவே போட்ட வழக்கு வழிப்பாதை அவகாசம் வேண்டுமென்று கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தொந்தரவு செய்யக்கூடாது என்று அசல் வழக்கு 39/2014 வழக்கை தாக்கல் செய்தேன். மேற்படி அந்த வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை மறைத்து இந்த வழக்கை மறுபடியும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

நான் ஜோதி சரோஜாவிடமிருந்து 2 சென்ட் சொத்தை என்றைக்கு விலைக்கு வாங்கினேன் என்றால் தேதி தெரியாது. அதன் சர்வே எண் தெரியாது. மேற்படி சொத்தை வாங்கி எவ்வளவு நாள் கழித்து 900 சதுர லிங்ஸ் சொத்தை வாங்கினேன் என்றால் 2 வருடம் கழித்து வாங்கினேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் 10 வருடம் கழித்துதான் 900 சதுரலிங்ஸ் சொத்தை வாங்கினேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. எ பட்டிகை சொத்திலிருந்து 2.900 சென்ட் சொத்து 8 அடி உயரமாக இருக்கும் என்றால் சமமாகத்தான் உள்ளது. எனது வீடு இருக்கும் இடம் தாழ்ந்தும் நான் விலைக்கு வாங்கிய மேற்படி சொத்து உயர்ந்தும் உள்ளது என்றால் சரிதான்.

தங்கராஜ் என்பவர் மணிகண்டன் என்பவருக்குதான் முதலில் சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி

மணிகண்டனிடமிருந்துதான் 2 ஆம் பிரதிவாதி விலைக்கு வாங்கினார் என்றால் தற்போது 2 ஆம் பிரதிவாதி அங்கு குடியிருக்கிறார் வேறு எதுவும் எனக்கு தெரியாது. நான் சொல்லக்கூடிய வழிப்பாதை என்னுடைய சொத்தின் கிழக்கு பக்கம் எல்கையை ஒட்டி முடிகிறது என்றால் சரிதான். முடியக்கூடிய இடத்தில் காம்போண்ட் சுவர் உள்ளது என்றால் உள்ளது. மதில் சுவருக்கு அந்த பக்கம் எனது சொத்து உள்ளது. காம்போண்ட் சுவர் முடியக்கூடிய இடத்திலிருந்து கிழக்கு மேற்காக 23 அகல லிங்ஸ்சில் எனக்கு 2 சென்ட் சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரிதான்.

பாதைக்கு வடக்கு பக்கம் உள்ள சொத்து 2 ஆம் பிரதிவாதியினுடைய சொத்து என்றால் சரிதான். தெற்கு பக்கமுள்ள 6 1/2 சென்ட் சொத்து 1 ஆம் பிரதிவாதிக்குரியது என்றால் சரிதான். தங்கராஜ் விலைக்கு வாங்கிய பாக்கி சொத்தை யார்யார் கைவசம் வைத்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ராஜீ மற்றும் அமலா ஆகியோர் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் ராஜீ சொத்தை விற்றுவிட்டுவிட்டார் வேறுநபரிடம் கைவசம் உள்ளது. அவர்களை எல்லாம் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தங்கராஜ் வாங்கிய 28 சென்ட் சொத்தில் பாதை அமைத்து பிளாட் பிரித்ததில் மேற்படி பாதையை அந்த பிளாட்டை வாங்கிய நபர்களை தவிர வேறு யாருக்கும் வழி அவகாசம் அதில் கிடையாது என்றால் தங்கராஜ் எனக்கு வழி அவகாசத்திற்காக வேண்டி 2.90 சென்ட் சொத்தை எழுதிக்கொடுத்தார்.

பிரதிவாதிகளுக்கு பி பட்டிகை சொத்தை தவிர வேறு வழிப்பாதை இல்லை என்றால் சரிதான். எனக்கு எனது சொத்திலிருந்து மேற்கு பக்கமும் ஒரு வழிப்பாதை உள்ளது என்றால் அதுவேறு நபர் உபயோகிக்கும் வழிப்பாதை தற்போது அந்த வழிப்பாதையைத்தான் உபயோகித்து வருகிறேன். எனது வீட்டிற்கான பிளானில் மேற்கு பக்கம் இருக்கும் வழிப்பாதையை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கு பக்கம் இருக்கும் வழிப்பாதை வழியாகத்தான் எனது இருசக்கர வாகனத்தை வீட்டிற்கு கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல ரோட்டில் நிறுத்திவிட்டு நான் வீட்டிற்கு வருவேன். நான் இருசக்கர வாகனத்தை நிறுத்தும் இடத்திலிருந்து எனது வீட்டிற்கு 200 அடி தூரம் இருக்கும். மேற்படி 200 அடி பாதைவழியாகத்தான் எனது வீட்டிற்கு நான் தற்போது சென்று வருகிறேன்.

வழக்கு பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் 1 ஆம் பிரதிவாதி 3 1/2 சென்டில் வீடும் 5 சென்ட் காலி மனை சொத்தும் உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் சொத்தின் வடக்கு தெற்காக நான் வாங்கிய 2 சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். 900 சதுரலிங்ஸ் சொத்தை தங்கராஜிடமிருந்துதான் வாங்கினேன் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தங்கராஜ் அவருக்கு உரிமைப்பட்ட இடத்தை பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்தபின் அதை மறுபடியும் எனக்கு வழி அவகாசத்திற்காக விற்பனை செய்ய எந்த அவகாசமும் கிடையாது என்றால் சரியல்ல தங்கராஜின் பெயரில்தான் பிளாட் போட்டுபோக மீதமிருந்த இடத்தைதான் எனக்கு எழுதிக்கொடுத்தார். அவர் பிளாட்போடும்போது ஒதுக்கிய வழிப்பாதையை பஞ்சாயத்திற்கு கொடுத்ததால்தான் மின்சார வாரியத்திலிருந்து அதன்வழியாக மின்கம்பம் நட்டு மின்இணைப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

நான் வாங்கிய 2 சென்ட் சொத்தை நான் அனுபவிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் தற்போது இல்லை முன்பு இருந்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இரண்டாவதாக வாங்கிய இடம் போலியான ஆவணத்தின்மூலம் வாங்கிய இடம் என்றால் சரியல்ல. பிளாட் போட்டு விற்பனை செய்தபின் 10 வருடம் கழிந்து எனக்கு எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்கும் வழிப்பாதை வழியாக வழி அவகாசம் கொடுத்தால் பிரதிவாதிகளின் வாகனம் கொண்டு செல்வதற்கு இடையூராக இருக்கும் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**